'KLEEN KHUT'
* தரமான றேனியோ பிரதிகள்
* தெளிவான போட் டோஸ்ரட் பிரதிகள்
* விரைவான தமிழ் ஆங்கில தட்டெழுத்து வேலைகளுக்கு
நாடுங்கள்:
'கிளீன் கட்'
239, மின்சார நிலைய வீதி யாழ்நகர். தொலைபேசி: 22828

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

'கிளீன் கட்'
நவ நாகரிகத்திற்கேற்ப
* பெண்கள் *
குழந்தைகளுக்கான உடைகள் குறுகிய காலத்தில் தைத்துக் கொடுக்கப்படும்
'KLEEN KHUT'
239, Power House Road,
JAFFNA.
TELE:- 22823

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹு மாசி மீ௳ 1 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா ஆகிர் பிறை 3 (13-02-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:75

# பாலைதீவுக் கடலில் படகுகள் மீது சூடு!

## பீரங்கிக் குண்டுகள் பட்டு தீப்பற்றி எரிந்து மூழ்கின

### குருநகர், மன்னாரில் இருந்து சென்ற 12 மீனவரைக் காணவில்லை

— அலுவலகச் செய்தியாளர்கள்: கே இரத்தினராஜசிங்கம், வனிதராஜன் —

யாழ்ப்பாணம், பெப். 13

பாலைதீவு - கக்கடதீவுக் கடற்பிராந்தியத்தில் செவ்வாய்க்கிழமை இரவு மீன் பிடித்துக்கொண்டிருந்த இயந்திரப் படகுகள் இரண்டின் மீது, ரோந்துப் படகு ஒன்று சரமாரியாகக் குண்டுகளைத் தீர்த்தது.

அதனால் அந்தப் படகுகள் நடுக் கடலில் தீப்பற்றி எரிந்து மூழ்கின. அவ்வாறு மூழ்கிய படகுகளில் இருந்த 12 மீனவர்களைக் காணவில்லை.

அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய சரியான விவரம் எதுவும் நேற்று நள்ளிரவுவரை கிடைக்கவில்லை.

காணமற்போன மீனவர்களில் அறுவர் குருநகரைச் சேர்ந்தவர்கள், அறுவர் மன்னாரைச் சேர்ந்தவர்கள்.

குருநகர் மீனவர்களை மீட்பதற்குச் சென்ற மற்றைய இரண்டு படகுகளும் அதில் சென்றவர்களும் இச்செய்தி எழுதப்படும்வரை திரும்ப வரவில்லை.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 9 மணியளவில் குருநகரைச் சேர்ந்த ஏழு மீனவர்கள் குருநகர் அந்தோனியாரை வணங்கி மாலை அணிவித்து விட்டு கடற்றொழிலுக்குப் புறப்பட்டனர்.

இயந்திரப் படகு ஒன்றில் பாலை தீவு. கக்கட தீவுக் கடல் பகுதிக்கு அவர்கள் தொழிலுக்குச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

அங்கு பாலைதீவுக் கடற்பகுதியில் கடற்படையினரின் ரோந்துப் படகு ஒன்றை இந்த மீனவர்கள் கண்டனர். அதனால் தமது படகை வேறு திசைக்கு திருப்ப முயன்றனர்.

அப்போது கடற்படையினரின் படகில் இருந்து பீரங்கிக்குண்டுகள் மீனவர் படகுகளை நோக்கி சரமாரியாகத் தீர்க்கப்பட்டன.

பீரங்கித் தாக்குதல்களினால் மீனவர்கள் சென்ற படகு தீப்பற்றி எரிந்த மூழ்கியது. அதிலிருந்து ஆறு பேர் பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லை. அவர்கள் காணமல் போய்விட்டனர்.

படகின் முன்பக்கத்தில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### கவர்னர் ஏற்கவில்லை

புதுடில்லி,பெப் 12

கர்நாடக மாநில முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டேயின் ராஜினமாவை மாநில கவர்னர் ஏற்றுக் கொள்ளவில்லை.

உயர்நீதிமன்ற தீர்ப்பு ஒன்றை அடுத்து ஜனதா கட்சி முதலமைச்சர் ராமகிருஷ்ணஹெக்டே தமது பதவியை ராஜினமாச் செய்திருந்தார்.

(முன்னர் வந்த செய்தி இரண்டாம் பக்கத்தில்)

## குண்டு வீச்சு; இன்டர்சிற்றிக்கு

### சாரதி காயம்; என்ஜின் சேதம்

யாழ்ப்பாணம்,பெப்13

நேற்றுக் காலை கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இன்ரசிற்றி ரயில் பரந்தனுக்கும் பளைக்குமிடையில் வழிமறிக்கப்பட்டு குண்டு வீசப்பட்டது.

இதனால் ரயில் என்ஜின் கதவுப் பகுதி சேதம் அடைந்தது. சாரதிக்குக் காயம் ஏற்பட்டது.

நேற்று நண்பகல் சுமார் 11-50 மணியளவில் பளைக்கும் பரந்தனுக்கும் இடையில் 218 1/2 மைல் கட்டைக்கு அருகில் இந்தச் சம்பவம் நடந்தது.

ஆயுதபாணிகளான இனந் தெரியாத இளைஞர்கள் சிலர் இதனைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

முதலில் மரக் குற்றி போட்டு ரயிலை மறித்தவர்கள், அதனைப் போக அனுமதித்ததாகவும், ரயில் புறப்பட்டபோது அதனை நோக்கி குண்டு வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தினல் பிரயாணிகள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

எனினும் ரயில் யாழ்நகர் வந்து திரும்பி கொழும்பு நோக்கிச் சென்றது.

இலங்கைத் தூண்டிலுக்கு இரையாக இந்தியா தயாரில்லை

# சுயாட்சியை உள்ளடக்கிய பதில் வேண்டுமாம்

## அப்போது தான் மீண்டும் பேச்சு நடத்த இந்தியா விரும்பும்

புதுடில்லி, பெப். 12

முழு அளவிலான சுயாட்சி வழங்கக்கூடிய விதத்தில், இலங்கையின் பதில் அமைய வேண்டும். அப்போதுதான் தமிழர் குழுக்களுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்தியா ஏற்பாடு செய்ய முடியும்.

இவ்வாறு இந்திய அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக 'இந்து' நாளிதழின் பிரதம செய்தியாளர் திரு. ஜி. கே. ரெட்டி எழுதியிருக்கிறார்.

இலங்கையின் தூண்டிலுக்கு இந்தியா இரையாகத் தயாரில்லை என்றும் இந்திய அரச உயர் வட்டாரங்கள் கருதுவதாகவும் அவர் எழுதுகிறார்.

திரு. ரெட்டி மேலும் எழுதியிருப்பதாவது :-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளைக் கொள்கை அளவில் அப்படியே இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அல்ல இந்தியாவின் நிலை.

எந்தக் கட்டத்திலும் இந்தியா அப்படிச் சொல்லவில்லை.

கூட்டணியின் மாற்று யோசனைகளை முன் நிபந்தனை இன்றி ஆராயத் தயாராக இருக்க வேண்டும் என்பதையே இந்

(4-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஓம், ஓம், கிழக்கு மாகாணத்திலை தமிழரையும் முஸ்லிம்களையும் மோத வைச்சுப் பாத்துப் போட்டினம் எல்லே, இனி வடக்கிலையும் முதலில் வவுனியாவிலை "ட்ரயல்' விட்டுப் பாப்போம் எண்டு நினைச்சினமோ பின்னை!

# மாநில சுயாட்சிக்கு குறைந்த எதையும் கூட்டணி ஏற்காது

### இந்தியா சென்று திரும்பிய மட்டுநகர் முன்னாள் மேயர் தகவல்

மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளர்: உதயசாரதி

மட்டக்களப்பு,பெப்.13

வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சிக்குக் குறைந்த எதையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்காது.

மட்டக்களப்பு மாநகர. சபையின் முன்னாள் மேயரும் கூட்டணிப் பிரமுகருமான திரு. இரா. அம்பலவாணர் இந்தியாவிலிருந்து திரும்பிய பின்னர் மேற்கண்ட தகவலை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்

திரு அம்பலவாணர் மேலும் சொன்னதாவது; வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சிதான் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் அபிலாஷை. இதைக் கூட்டணித் தலைவர்களிடமும் நாம் வற்புறுத்தினேம்.

கூட்டணித் தலைமைப் பீடத்தின் நிலையும் இது தான்.

வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சிக்குக் குறைந்த எதையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்கப் போவது இல்லை. இதைக் கூட்டணித் தலைவர்கள் எம்மிடம் திடமாகக் கூறிவிட்டனர்.

இப்படி திரு. அம்பலவாணர் சொன்னர்.

தமிழகத்தில் உள்ள கூட்டணித் தலைவர்களின்

[4-ஆம் பக்கம் பார்க்க]

# மலையகத்தில் வன்செயல் மீண்டும் தலைதூக்குகிறது

கொழும்பு, பெப்.13

மலையகத்தில் மீண்டும் வன்செயல்கள் ஆங்காங்கே தலைதூக்கியுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கள் இரவு கினிகத்தேனையில் இருந்து வந்த பஸ் ஒன்று தாக்கப்பட்டது. அதில் இருந்த தமிழ்ப் பயணிகளில் நால்வர் காயமடைந்தனர்.

அனைவரும் மலையகத் தமிழர். ஒருவர் அப்பகுதி தோட்டக் குழுவின் தலைவர். படுகாயங்களுக்கு ஆளான அவர் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

டிக்கோயா என்னும் இடத்தில் ரோந்து வந்த பாதுகாப்புப் படையினர் சுட்டதில் ஒருநபர் படுகாயம் அடைந்தார். டிக்கோயா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவரின் உடல் நிலை மோசமாகவே கண்டி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## ஊரடங்கு

புதுடில்லி, பெப். 12

பஞ்சாப் மாநிலத்தில் பொற்கோயில் அமைந்துள்ள அமிர்தசரஸ் பகுதியில் பல இடங்களில் காலவரையறையின்றி ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# லலித் புதுடில்லி போகமாட்டார்

### அமைச்சரவை முடிவில் அல்விஸ்

கொழும்பு, பெப். 13

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி புதுடில்லி செல்லமாட்டார்.

அமைச்சரவைக் கூட்ட முடிவில் ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் இதை அறிவித்தார்.

இனப்பிரச்சினை குறித்து பேசுவதற்கு அமைச்சர் அத்துலத்முதலி புதுடில்லி செல்வாரா? என்று கேட்டபோதே, அமைச்சரவைப் பேச்சாளரான கலாநிதி டி அல்விஸ் இதனைச் சொன்னர்.

கேள்வி: தொண்டமானைக் கைது செய்யும்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கேட்டுள்ளாரே! இது பற்றி அமைச்சரவை ஆராய்ந்ததா?

அமைச்சர்: அது ஆராயப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அப்படித்தான் சொல்வார். அவர் எதிர்க்கட்சித் தலைவராயிற்றே!

கேள்வி: மாலைதீவில் பிரதமர் ராஜீவ் காந்தி வெளியிட்ட கருத்துப் பற்றி ஆராயப்பட்டதா?

அமைச்சர்: ஆராயப்பட்டது. தொடர்ந்து இலங்கை இந்திய மத்தியஸ்தத்தைத்தான் நாடுகிறது.

கேள்வி: திரு. பண்டாரி மீண்டும் இலங்கை வருவாரா?

அமைச்சர்: வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சுபநேரம்

13.2.1-86

வியாழக்கிழமை

சுபநேரம்:
8.04 முதல் 9 34 வரை

ராகுகாலம்:
2.04 முதல் 3 34 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# பண்டாரியுடன் பேச கூட்டணித் தலைவர்கள் புதுடில்லி செல்வர்

சென்னை, பெப். 12

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இன்னும் சில தினங்களில் புதுடில்லி செல்லவிருக்கின்றனர்.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் அச்சமயம் ஆலோசனை நடத்துவர் என்று தெரிகிறது.

தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்து நடக்கும் அட்டூழியங்கள் பற்றி திரு பண்டாரியிடம் அப்போது விரிவாக எடுத்துரைப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டணித் தலைவர்களான திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோரே புதுடில்லி செல்ல இருக்கிறார்கள்.

★ வவுனியாவில்

# முஸ்லிம் உடையில் வந்த பாதுகாப்புப் படையினர்

### துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் காயம்

வவுனியா, பெப். 13

வவுனியாவில் முஸ்லிம்கள்போல் உடையணிந்து மினிவான் ஒன்றில் சென்ற பாதுகாப்புப் படையினர், இளைஞர் கோஷ்டி ஒன்றை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் வவுனியா நகரில் இருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் உள்ள வேப்பங்குளம் என்னும் இடத்தில் நேற்று மாலை மூன்று மணிக்கு நடந்தது.

இந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள அரிசி ஆலை ஒன்றின் மீதும் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது

ஆலைக்குள் ரி வி. படம் பார்த்துக் கொண்டிருந்த சிலர் துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து தப்பி ஓடினர் என்றும் —

அங்கிருந்த இரண்டு பேரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்து கொண்டு சென்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

## மட்டுநகர் கச்சேரி களஞ்சியத்தில் கொள்ளை

### உணவுப் பொருள்கள் சூறையாடல்

மட்டக்களப்பு,பெப்.13

மட்டக்களப்பு கச்சேரியில் உள்ள சமூகசேவைக் களஞ்சியம் உடைக்கப்பட்டு அரிசி, மா, சீனி கொள்ளையிடப்பட்டன.

கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவு களஞ்சியம் உடைக்கப்பட்டு கொள்ளை இடப்பட்டது.

தோணி மூலம் மட்டக்களப்பு கச்சேரிக்குள் நுழைந்த ஆயுதபாணிகளான சில நபர்களே இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகின்றது. கொள்ளை இடப்பட்ட பொருள்களின் பெறுமதி 15 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து எஞ்சிய உணவுப் பொருள்களை இருதயபுரத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கும்படி மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து உத்தரவிட்டார்.

### மகாபொல பரிசு

## அரச அதிபர் வழங்குவார்

சுண்டுக்குளி, பெப் 13

மகாபொல புலமைப் பரிசில் பெறும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான பரிசில்களை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் வழங்குவார்.

புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை கட்டுகம்பொலை பன்னல மகா வித்தியாலயத்தில் நடைபெறும்போது அங்கு வைத்து அரச அதிபர் இந்தப் பரிசில்களை வழங்குவார்.

## மண்டேலா விடுதலை?

லண்டன், பெப், 12

தென்னுபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. மண்டேலா விரைவில் விடுதலை செய்யப்படலாம் என ஹேஸ்யங்கள் தெரிவிக்கப்பட்டன.

சுமார் கால் நூற்றுண்டு காலமாக அவர் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டிருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறமொழிப் படங்களில் சிவகுமார் நடிக்க மறுப்பு

நடிகர் சிவகுமார் எத்தனையோ புதுமுகங்கள் வந்தும் இன்னும் திரையுலகில்பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்.

நடிகர்களில் இவர் வித்தியாசமானவர் அனைவரிடமும் பண்பாகப் பழகுவார். பிறரைப்பற்றி இவர் விமர்சிப்பதில்லை. பழகும் விதம், ஷூட்டிங்கிற்கு ஒழுங்காகச் செல்வது – இவையே இவர் திரையுலகில் நின்று பிடிப்பதன் மர்மமாகும்.

பிறமொழிப் படங்களில் சிவகுமார் நடிப்பதில்லை.

அதைப்பற்றி அவரே கூறுகிறார்:

பிறமொழிப் படங்களில் நடிக்காததற்கு மொழிப் பிரச்சினை தான் காரணம். எனக்குத் தெரிந்த தமிழ் மொழியில் கதாபாத்திரத்தின் வாயிலாக சில கருத்துக்களைப் பிரதிபலிக்கிறேன்.

என் வாய் என்னுடைய கருத்தை எனக்குத் தெரிந்த மொழியின் மூலம் வெளிப்படுத்தினால் தான் நிச்சயமாக அதற்கு ஒரு பலன் கிடைக்கும்.

அப்படி இல்லாமல் எனக்காக இன்னொருவர் பேசுவதோ, அவரது குரல் எனக்காகத் தரப்படுவதோ சரியான பிரதிபலிப்பாக அமையாது

அதனால் தான் அன்று முதல் இன்று வரை பிறமொழிப் படங்களில் நடிக்காமலேயே இருந்து வருகிறேன்.

படங்களின் எண்ணிக்கை பற்றியோ, அவற்றின் வாயிலாகக் கிடைக்கும் ஊதியத்தைப் பற்றியோ நான் பெரிதாக நினைப்பது இல்லை.

என் திறமைக்கு ஏற்ப படங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் முழுத் திறமையையும் காட்டி நடித்து வருகிறேன். அதன் மூலம் என்னுடைய "இமேஜ்" காப்பாற்றப்படுகிறது.

பிரபல டைரக்டர்கள் எத்தனையோ பேர் பிறமொழிப் படங்களில் நடிக்கச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கூறினார்கள்.

எனது இலட்சியத்தைக் கூறி நடிக்க மறுத்து விட்டேன். இந்த இலட்சியம் என்றும் என்னுடன் நிலைத்து நிற்கும்" என்றார்.

தினசரி சினிமா

# பதவி விலகினார் முதல்வர் ஹெக்டே

### உயர் நீதிமன்றம் அவருக்கு எதிராக வழக்கில் தீர்ப்பளித்தது காரணம்

புதுடில்லி, பெப். 12

கர்னாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே தமது பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

தமது பதவி விலகல் தொடர்பான கடிதத்தை ஆளுநருக்கு அவர் அனுப்பி விட்டதாக கர்னாடக செய்தித்துறை மந்திரி அறிவித்துள்ளார்.

ஆளுநர் வட கர்னாடக பகுதியில் அத்தருணம் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்ததால் இக்கடிதம் உடனடியாக அவரிடம் கையளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையொன்றில் உயர் நீதிமன்றம் ஹெக்டேக்கு எதிராகத் தீர்ப்பளித்துள்ளது.

இதையடுத்தே முதலமைச்சர் தமது பதவியிலிருந்து விலக முடிவெடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாராயத்தைப் போத்தல்களில் அடைக்கும் ஒப்பந்தமொன்றை வழங்கியது தொடர்பானதே அந்த வழக்காகும்.

பதவி விலகுவதற்கு ஹெக்டே தீர்மானித்ததை எதிர்க்கட்சிகள் பாராட்டியுள்ளன.

அவர் ஒரு நேர்மையான அரசியல்வாதி என்பதை நிரூபித்துவிட்டதாக அவை மேலும் தெரிவித்துள்ளன.

எனினும் ஹெக்டேயின் இந்தத் தீர்மானம் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆருக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

ஹெக்டே தமது தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. ஹெக்டே ஆக்க உணர்வு மிக்கவர்; அவரது முதலமைச்சர் பணி கர்னாடகத்துக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் தமது செய்தியில் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பிலிப்பீன்ஸ் சம்பவங்கள்:

## அமெரிக்கா கவலை அதிகாரி ஹபீப்பை றேகன் மணிலாவுக்கு அனுப்புவார்

வாஷிங்டன், பெப். 12

பிலிப்பீன்ஸ் நாட்டில் நடைபெற்ற தேர்தல் கால சம்பவங்கள் அமெரிக்காவுக்குப் பெருங் கவலையை அளித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பான விளக்கமான அறிக்கையொன்றை தயாரிக்க இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

இந்த ஆய்வினை நடத்துவதற்கு அரசு அதிகாரி பிலிப் ஹபீப் மணிலாவுக்கு பயணமாவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வட்டிகுறைப்பு

புதுடில்லி, பெப். 12

வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இந்தியர்களின் வைப்பு நிதிக்கான வட்டி குறைக்கப்படும்.

இவ்வட்டிக் குறைப்பு வைப்புக்காலத்தை கருத்திற் கொண்டு கணிக்கப்படும்.

இவ்வாறு இந்தியன் றிசேர்வ் வங்கி அறிவித்துள்ளது

## தேர்தல் பற்றி அறிவிப்பு

போர்ட்-ஓ-பிறில்ஸ் பெப். 12

ஹெய்டியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள புதிய இராணுவத்தினர் தேர்தல்கள் நடத்தப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

அவசரகால சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் டொன்டன்மாக்கூஸ் இரகசியப் பொலீஸ் பிரிவு கலைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் பதவி கவிழ்க்கப்பட்ட டுவாலியர் சர்வாதிகார ஆட்சிக்கு இந்த பொலீஸ் பிரிவே முட்டுக் கொடுத்து வந்தது.

## ரஷ்ய காவலிலிருந்து அனட்டோலி விடுதலை

லண்டன், பெப் 12

சென்ற சில ஆண்டுகளாக ரஷ்ய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அனட்டோலி ஷெரன்ஸ்கி விடுதலை செய்யப்பட்டார்

இஸ்ரேலுக்காக உளவு பார்த்தார் என்று இவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

மேற்கு நாடுகள் அனட்டோலி பற்றி கருத்து வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலுக்காக அவர் உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டு அபத்தமானது.

ரஷ்ய கொள்கைகளை தீவிரமாக எதிர்த்தது தவிர அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை. இவ்வாறு அந்தக் கருத்துக்களிற் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யாவிலுள்ள இஸ்ரவேலியர்கள் தமது தாயகத்தில் சென்று குடியேற அனுமதிக்கப்பட வேண்டுமென அனட்டோலி கூறிவந்துள்ளார்

ரஷ்ய பயணிகள் விமானமொன்றை முன்னொரு முறை இஸ்ரவேலுக்குத் திசை திருப்ப முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டதும் இங்கு நினைவுபடுத்தக் கூடியதாகும்.

## வெளி உலகில்

## ஈரான் - ஈராக் போர்: எந்த நாட்டுக்கு வெற்றி?

### இரு நாடுகளுமே உரிமை கொண்டாடுகின்றன

தெஹ்ரான், பெப். 12

நடந்து கொண்டிருக்கும் ஈரான் – ஈராக் போரில் இரு நாடுகளும் ஒன்றை மற்றொன்று முறியடித்து விட்டதாகத் தெரிவித்துள்ளன.

குவைத் எல்லையை ஒட்டிய ஈராக் பகுதிகளில் பல இடங்களைத் தான் கைப்பற்றியுள்ளதாக ஈரான்தெரிவித்துள்ளது

ஷட்தல் அரபாப் பகுதிகள் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் ஈராக்கிய எண்ணெய் நிலைகள் பலவற்றைத் தாக்கியும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கின் கவசவாகனங்கள் டாங்கிகள் பலவற்றை ஈரான் படைகள் தகர்த்துள்ளன.

இவ்வாறு ஈரான் வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவித்துள்ளன.

எனினும் ஈராக் இராணுவம் ஈரான் படையினருக்கு பதிலடி கொடுத்து முறியடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஈரான் கைப்பற்றிய தனது பகுதிகள் பலவற்றை மீட்டெடுத்து விட்டதாகவும் மேலும் தெரிவித்துள்ளது.

"ஈரான் ஈராக் மோதலில் இது மிகப் பலத்த தாக்குதல். ஈரான் இதில் பிரமாண்டமான வெற்றியைப் பெற்றுள்ளது

இவ்வாறு ஈரான் தலைவர் கொமெய்னி குறிப்பிட்டுள்ளார்.

### காஸ்ட்ரோ புகைபிடித்தலை நிறுத்திவிட்டார்

ஹவான, பெப்.12

கியூபா தலைவர் பிடல் காஸ்ட்ரோ புகை பிடித்தலை நிறுத்தி விட்டதாக அறிவித்துள்ளார்.

"புகை பிடித்தலை தான் நிறுத்தியதற்கான காரணம் எனது உடல் நலம் கருதியல்ல; பொது சுகாதார இயக்கத்தை அபிவிருத்தியடையச் செய்வதற்காகவே" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தடித்த அளவிலான ஹவானா சுருட்டை விரும்பி புகைக்கும் பழக்கமுள்ளவர் தலைவர் காஸ்ட்ரோ என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் கன்டர்பரி ஆர்ச் பிஷப்

சென்னை, பெப். 12

பாரதத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள கன்டர்பரி ஆர்ச் பிஷப் றுபேர்ட்றுன்சி சென்னையில் 3 நாட்களை செலவிடுவார்.

பல அங்கிலிக்கன் திருச்சபையின் தேவாலய பூசைகளில் அவர் கலந்து கொள்வார்.

தமிழ்நாட்டில் ஆளுநர் குரானாவை அவர் சந்தித்து பேசுவார்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### யாழ் வடிகால்கள் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள வடிகால்கள் யாவும் பாரிய திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

இப்படி மாநகர ஆணையாளர் திரு. சி.வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

கலைச்சுடர் கிராம அபிவிருத்திச் சங்கத் தூதுக் கோஷ்டி ஒன்று ஆணையாளரை அண்மையில் சந்தித்து, ஆறும் வட்டார அபிவிருத்தி பற்றிக் கலந்துரையாடியது. அப்போது தான் ஆணையாளர் இத்தகவலை வெளியிட்டார்.

தூதுக்குழுவுக்கு திரு. அ. தங்கராசா தலைமை வகித்தார்.

பொருளியல்

A/L 1986, 87 மீட்டலும் வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டன. ஆசிரியர்; Mr. K. Ranjit, B.A. (Hons) செல்க்கா இன்ஸ்ரிரியூட், டச் வீதி, சாவகச்சேரி.

பரிசு

மாணவ மணிகளே: இக்கணமே சிறந்த செல்வம்! 25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி அப்பியாசக் கொப்பி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

★ தொலைக்காட்சி, வானொலி அனுமதிப் பத்திரம்

# உரிய காலத்தில் வழங்காமல் இப்போது தண்டப் பணமா?

## அநீதி என்கிறது பிரஜைகள் குழு

சுன்னாகம், பெப்.13

தொலைக்காட்சி, வானொலிப் பெட்டிகளுக்கு உரிய காலத்தில் அனுமதிப் பத்திரங்களை வழங்காது இருந்துவிட்டு, இப்பொழுது தண்டப் பணம் வசூலிப்பது அநீதியான செயல்.

இப்படித் தெரிவிக்கும் அவசரத் தந்தி ஒன்றை சுன்னாகம் பிரஜைகள் குழு, தபால் தந்தித் தொலைபேசித் தொடர்பு அமைச்சருக்கு அனுப்பியுள்ளது.

குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் அனுப்பிய இத்தந்தியில் கூறப்பட்டிருப்பதாவது;

தொலைக்காட்சி, வானொலிப் பெட்டிகளுக்கான அனுமதிப் பத்திரம் பெற ஜனவரி 12, 13 ஆம் திகதிகளில் பொதுமக்கள் சுன்னாகம் தபால் கந்தோர், அதன் கீழ் வரும் உபதபால் நிலையங்கள் ஆகியவற்றின் முன்னர் நீண்ட கியூவில் நின்றனர்

"லேபல் முடிந்து விட்டது 15 ஆம் திகதி திங்கள் வாருங்கள். அனுமதிப் பத்திரம் தருவோம்" என்று தபால் அதிகாரிகள் கூறி பொதுமக்களைத் திருப்பி அனுப்பிவைத்தனர்

பொதுமக்கள் மீண்டும் திங்கள் சென்ற பொழுது தபால் அதிகாரிகள் கையை விரித்து விட்டனர். பணத்தை வைத்து இருக்கப் பாதுகாப்பு இல்லை என்று கூறினர். இப்படிச் செய்து விட்டு, இப்பொழுது தண்டப் பணம் அறவிடுவது அநீதியான செயலாகும்

இப்படி அவசரத் தந்தியில் கூறப்பட்டுள்ளது.

## 25 பேர் பூஸாவுக்கு

யாழ்ப்பாணம், பெப். 13

வவுனியாவில் கைது செய்யப்பட்ட 425பேரில் 25 பேர் பூஸா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

முகமூடி அணிந்தவர்களுடன் வீடு வீடாகச் சென்று ஆயுதப்படையினர் நடத்திய சோதனைகளில் மேற்கண்ட 425 பேரும் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

## ஆனையிறவுக்கப்பால் செல்ல விருப்பமில்லை

### கிளிநொச்சி ஆசிரியரின் நிலை

அச்சுவேலி, பெப். 13

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களில் 90சதவீதமானோர் ஆனையிறவுக்கு அப்பால் செல்ல விரும்பவில்லை. பளைப் பகுதியில் கடமைபுரியவே விரும்புகின்றனராம்.

கிளிநொச்சிப்பகுதியில் அண்மைக் காலத்தில் நிலவிவரும் அத்துமீறிய இராணுவ நடவடிக்கையும் முகாம்களைத் தாண்டி பிரயாணம் செய்வதில் உள்ள சிரமமும் தான் இவர்களை ஆனையிறவுக்கு அப்பால் செல்லவிடாமல் தடைபோடுகிறது எனக் கூறப்படுகிறது.

### முகமூடி திருடர் சிங்களத்தில் பேசி நடத்திய கொள்ளை

கிளிநொச்சி, பெப் 13

முகமூடி அணிந்து சிங்களத்தில் பேசியபடி வீடு ஒன்றில் நுழைந்த ஒரு கோஷ்டியினர் பொருள்களைக் கொள்ளை அடித்தனர்.

கிளிநொச்சி 156 ஆம் கட்டை விவேகானந்தா நகர் என்னுமிடத்தில் இச்சம்பவம் நடந்தது.

தொலைக்காட்சிப் பெட்டி, நகை, சைக்கிள், றேடியோ, மணிக்கூடுகள், உடைகள் என்பவையே களவுபோன பொருள்களாகும்.

### திருட்டுப் பொருள் மீட்பு

கொடிகாமம், பெப். 13

வீடு ஒன்றில் இருந்து வானொலி, வெள்ளிப் பாத்திரங்கள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

இந்த விவகாரத்தில் [illegible] விருப்பமிட்டு திருட்டுப்பொருள்களை மீட்டுக் கொடுத்தனர்.

[illegible] வாளில் இந்த சம்பவம் நடந்தது.

## இஸ்லாமிய புத்தக கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.13

மே மாதத்தில் கொழும்பில் இஸ்லாமியப் புத்தகக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது.

முஸ்லிம் எழுத்தாளர்களின் முக்கிய படைப்புக்கள் இக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும்.

இஸ்லாமிய புத்தகக் கண்காட்சி ஒன்று இலங்கையில் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சி சம்பந்தமாக நாட்டில் உள்ள முஸ்லிம் எழுத்தாளர்களின் ஆதரவு நாடப்பட்டுள்ளது

## வெளிநாட்டில் பெற்ற கலைஞனின் அனுபவம்

### குறுநாவலானதாக விமர்சனம்

கரவெட்டி, பெப். 13

'வெளிநாடுகளுக்கு எத்தனையோ எழுத்தாளர்கள் செல்கிறார்கள். ஆனால் எல்லோரும்தமது அனுபவங்களை நாவலாக எழுதியதில்லை. இந்த வகையில் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான குவைத்தில்தாம்வாழ்ந்த காலத்தில் கண்ட, கேட்ட, அனுபவித்த விடயங்களை ஓர் கலைஞனுக்குரிய ஆழமான பார்வையுடன் ரசமான குறுநாவலாகத் தந்திருக்கிறார் நெல்லை க.பேரன்.

அவர் மக்களுடைய விடயங்களைப் புதுமையாக எழுதுபவர். நல்ல சிந்தனையாளர்.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற 'விமானங்கள் மீண்டும் வரும்' நூல்வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்த இலங்கை வங்கி நெல்லியடிக் கிளைத் தலைவர் திரு. வே. தில்லைநாதன் கூறினார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் பேசும்போது இன்று நடைபெறும் இனவிடுதலைப் போராட்டத்திற்கு எமது எழுத்தாளர்களுடைய இலக்கியங்கள் நாலுருப்பெறுவதும் முக்கியமானதாகும்

இங்கு எழுத்தாளர்களுக்கு நூல்களை அச்சிட்டுக் கொடுக்க உகந்த ஸ்தாபனம் ஒன்று அவசியம் உருவாக்கப்பட வேண்டும்.

வங்கிகளும் இந்த நூல் வெளியீடுகளுக்குக் கடன் கொடுத்து உதவலாம் என்றார்.

கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரனின் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

செல்வி மாலதி கதிர்காமத்தம்பி நன்றியுரை கூறினார்.

## கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ் மாவட்டத்தில் தோட்டச் செய்கையாளர்களுக்கு பதினோராயிரம் பழமரக் கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன.

பல்லாண்டு கால நற்சேவை அளித்து வரும்

மல்ரி சேவிசஸ்

வழங்கும்

பன்முகச் சேவை

செயலகம்: தமிழ், ஆங்கில, தட்டச்சு, றோனியோ, கடிதத் தொடர்புகள், ஷி ஆலோசனைகள் மற்றும் செயலகச் சேவைகள் யாவும்.

தொலைபேசி சுத்தப்படுத்துதல்: தூசி, அழுக்கு, துர்நாற்றம் நீக்கி, தூய்மையும், பளிச்சிடும் கவர்ச்சியுடன் சிக்கலின்றி நிதானமாக தொலைபேசி இயங்கிட திணைக்கள அனுமதியுடன் செயல்படும் சேவை.

திருமணச் சேவை: கண்ணியத்துடன் உங்கள் அபிலாஷைகளுக்கு அமைய திருமணப் பொருத்தங்களை நிறைவேற்றிவைக்கும் சேவை. திருமணம் நிறைவேறும் வரை எவ்வித கட்டணமும் இன்றிச் செயல்படும் சேவை.

அஞ்சல் வழி ஆங்கில கல்விச் சேவை: இக்கட்டான இக் காலகட்டத்தில் வீட்டிலிருந்த வண்ணமே மாணவ, மாணவியர்களும், வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடுபவர்களும் ஆங்கிலம் பேச, வாசிக்க, எழுத கற்றுப் பயன் பெறலாம்.

தரகு முகவர் சேவை: காணி, வீடு, கடை, கட்டடங்கள் எதுவானாலும் விற்க, வாங்க, குத்தகைக்கு தரகு முகவர்களால் உங்கள் விருப்பத்தினை செயற்படுத்துவோம்.

பிரயாண சேவை: வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள் எதுவானாலும் உதவுவதோடு, மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல விரும்புவோருக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்து தருவோம்.

தரமான சேவைகள் !

நிதானமான கட்டணம் !!

விபரங்களுக்கு:

மல்ரி சேவிசஸ்

37(351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கு அண்மையில்) T'Phone: 22762

நவா மினி (உஷா மினி முன்பாக)

CHURCHILL's LEOPARDS



புதிய படபோஸ்ரர்கள் படக்கொப்பிகள் விற்பனைக்கு, வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

உமா மினி (நவா மினி முன்பாக)




Missing in Action

(A) வயது வந்தவர்களுக்கு மட்டும்.

(ஒரிஜினல் பிரதியில் முதலாவதாகக் காண்பிக்கப்படுகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம் செய்தால் எய்த விரும்பியதை எய்தலாம்.

- பாரதியார்.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,

தொலைபேசி: 24805, 22078

13-02-86 த. வெ. 23


## அபிவிருத்தி சபையும் ஆட்கொல்லியாகக் கூடாது

மின்கம்பம் முறிந்து சிறுமி மரணமானார் நேற்றைய உதயனில் வெளியான செய்திகளில் இதுவும் ஒன்று.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள இணுவில் என்ற ஊரில் இந்தப் பரிதாப சம்பவம் நடந்திருக்கிறது மின்கம்பத்துக்குப் பலியான சிறுமிக்கு வயது நான்கு உக்கிய நிலையில் இருந்த சிமெந்துக் கம்பம் முறிந்து விழுந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இது ஒரு விபத்து இப்படி இன்னும் எத்தனையோ விபத்துகள் நடக்கக்கூடும் என்று அஞ்ச வேண்டி உள்ளது அவ்வாறு அஞ்சுவதற்குக் காரணம்: யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபையின் சீரற்ற நிர்வாகம்!

குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்கான மின்சார சேவையை, குறிப்பாக கிராமப்புற மின்சார சேவையை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபை தான் நிர்வகித்து வருகின்றது. முன்னர் கிராம சபைகள், பட்டினசபைகளாக இருந்து உப-அலுவலகங்களாகப் புதுப்பெயர் பெற்றவையே கிராமப்புற மின்சார சேவையைக் கொண்டு நடத்துகின்றன.

எரிபொருள் விலை உயர்வு, நவீன சாதனங்களின் பாவனை என்பவற்றால் மின்சார பாவனை மிகவும் உயர்ந்து விட்டது தேவைக்கேற்ற மின்சார விநியோகம் வடக்கில் நடக்கிறதா என்பது தனி விடயம். நடக்கும் சேவையும் சரிவர நடைபெறுவதில்லை என்பதே பொதுமக்களில் பலரின் குறைபாடு.

அதாவது மாவட்டசபை உப அலுவலகங்களின் மின்சார விநியோக சேவை திருப்தியானதாக இல்லை.

மின்சாரம் மனிதனின் நல்ல சேவகன். ஆனால் அதனைச் சீராக, விதிமுறைப்படி கையாளாவிட்டால் அந்த நல்ல சேவகனே எமக்கு எமனாக மாறும் அபாயம் உண்டு

இதனைச்சிறிதும் உணராத விதத்தில் உப-அலுவலகங்களின் மின்சார சேவை நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது.

மின் கம்பங்கள் சரியாக நடப்படுவதில்லை. வீதிகளில் மின்கம்பிகள் சரியாகப் பொருத்தப்படுவதில்லை வீதிக்குக் குறுக்கும் நெடுக்குமாகக் கூட மின்கம்பிகளைப் பொருத்துகிறார்கள். பராமரிப்பு வேலைகள் ஒழுங்காகச் செய்யப்படுவதில்லை.

மின்கம்பங்களை நடுவதில்கூட சில சந்தர்ப்பங்களில் உரியகவனம் எடுக்கப்படுவதில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் கிராம ஒழுங்கை ஒன்றில் நடப்பட்ட மின்கம்பம் அடுத்த நாளே சரிந்து விழுந்ததாக எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. நல்ல வேளை கம்பம் விழுந்த சமயம் ஒருவரும் போக்குவரத்துச் செய்யவில்லை. அது மட்டும் என்ன? எப்போது "தொப்" என்று விழுமோ என்ற அவசர நிலையில் பல மின்கம்பங்கள் "அந்தரப்படுவதை" கிராம வீதிகளில் நேரில் காண்கிறோம்.

பழுதடைந்த கம்பங்கள், உக்கி உடைந்த நிலையில் அந்தரத்தில் நிற்பதையும் பார்த்திருப்பீர்கள். அவை முறிந்து விழுவதற்கு முன்னர் அகற்றிப் புதியவற்றை நடவேண்டும் என நிர்வாகங்கள் நினைப்பதில்லை.

இவ்வாறு, மின்சார விநியோக சேவை ஏனோ தானோ என்ற போக்கில் நடக்கிறது. தகுதியும், திறமையும் வாய்ந்த உத்தியோகத்தர்களும், தொழிலாளர்களும் இச்சேவையைக் கையாள்கிறார்களா என்பதும் கேள்விக்குறிதான். இச்சேவைக்கு ஆட்சேர்ப்பதில் உப - அலுவலகங்களில் பல ஊழல்கள் நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டப்படுவது உண்டு.

கூட்டு மொத்தமாகச் சொல்வதானால் அபிவிருத்தி சபை மின்சார விநியோக சேவையில் நிலவும் சீர்கேடு, அசமந்தம், ஊழல் என்பவற்றை உடனடியாகக் களைந்தாக வேண்டும்.

உப- அலுவலகங்கள் மட்டத்தில் நிர்வாகச் சீர்கேடு நீக்கப்படுவதை செயலகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் உறுதி செய்வது அவசியம்.

வடக்கில் உரிய முறையில் பணியாற்ற முடியாத அளவுக்கு சூழ்நிலை சீரற்றுப் போய் விட்டது என்ற போர்வைக்குள் நின்று, நொண்டிச் சாட்டுச் சொல்லவோ அல்லது தப்பித்துக் கொள்ளவோ அதிகாரிகளும் ஊழியர்களும் முயற்சிக்கக் கூடாது.

எந்த இக்கட்டான நிலையிலும் மக்களின் அத்தியாவசியச் சேவைகளை செய்தாக வேண்டும். இந்தக் கடமை மனப்பான்மை, எப்போதிலும்விட இப்போதுதான் அதிகம் அவசியம்.

அபிவிருத்திச் சபையும் அதன் உப-அலுவலகங்களும் ஆட்கொல்லி சபைகளாகவும், அலுவலகங்களாகவும் மாறக்கூடாது. அதனைத் தடுக்க வேண்டும். இல்லையேல் ஆட்கொல்லிப் படைகளுக்கும் இந்த ஸ்தாபனங்களுக்கும் வித்தியாசம் இல்லையே!

# யாழ் பிரதேசத்தில் வாழ்க்கைச் செலவு உச்சநிலையில்

## மற்ற இடங்களைவிட அதிகம்

### கொழும்பு கருத்தரங்கில் வெளியான தகவல்

யாழ்ப்பாணம், பெப். 13

வாழ்க்கைச் செலவு இலங்கையிலேயே யாழ் பிரதேசத்தில்தான் அதிகரித்து இருக்கிறது பொருள்களின் சில்லறை விலையும் இங்குதான் உச்சமாக இருக்கிறது.

இத்தகவல் கொழும்பில் நடந்த புள்ளி விவரத் திணைக்களக் கருத்தரங்கில் வெளியானது புள்ளி விவரப் பணிப்பாளர் கலாநிதி ஜி எம். அபேரத்ன தலைமை வகித்தார்

1984 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி வாழ்க்கைச்செலவு யாழ்ப்பிரதேசத்தில்தான் உச்சமாக இருந்தது என்ற விவரம் கருத்தரங்கில் வெளியானது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்க்கைச் செலவு ஏன் அதிகரித்துள்ளது என்பதற்கான காரணிகளை, யாழ் பிரதேச தரவு சேகரிப்பாளர் திரு பொ. ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

அவர் சொன்னதாவது; நாட்டுநிலைமை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து யாழ்பிரதேசம் வருகிறார்கள்.

உள்ளூர்ப் பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்படுகின்றன.

போக்குவரத்து வசதி இன்மையால் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் உணவுப் பொருள்கள் குறைந்துள்ளன.

அச்சம் காரணமாக கடல்தொழிலுக்குச் செல்வோர் தொகை குறைந்துள்ளது

இவற்றினால் உணவுப் பொருள்களின் விலைகள் ஏற்றமடைந்துள்ளன.

இப்படி திரு ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்டார்.

## ஆங்கில கல்வி போதனைக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், பெப்.13

தேசிய ஆங்கிலச் சான்றிதழ் வகுப்புகள் நடத்தும்கல்வி நிலையங்களுக்கு பதினாலாயிரம் ரூபா, பத்தாயிரம் ரூபா, ஏழாயிரம் ரூபா என்று மூன்று அடிப்படையில் நிதிவசதி அளிக்கப்படவுள்ளது.

முதலாம்வகை கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பதினாலாயிரம் ரூபா உடுவில் மகளிர்கல்லூரி உயர்கல்விப் பிரிவுக்கு வழங்கப்படுகிறது.

அகில இலங்கை ரீதியில் இந்த நிதிவசதி பெறுகின்ற நான்கு கல்வி நிறுவனங்களில் உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது.

மகாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நிதியத்திலிருந்து இத்தொகை வழங்கப்படுகிறது

தேசிய ஆங்கிலக் கல்விச் சான்றிதழ் வகுப்புப் பாவனைக்கு உரிய மாணவர் உசாத்துணை நூல்கள், ஆசிரியர் கைநூல், செவிப்புல கட்புல சாதனங்கள் ஆகியவை பெறுவதற்கு இந்த நிதியை உபயோகிக்க வேண்டும் என்று கல்வி அதிகாரி திரு கே.சோமசுந்தரம் உதயனிடம் தெரிவித்தார்.

### உபந்நியாசம்

இணுவில், பெப். 13

இன்று வியாழக்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து 12தினங்கள் நடைபெறும் இணுவில் கண்ணகா பரமேஸ்வரி ஆலய உற்சவத்தில் 'சைவர்கள் வழிபாட்டில் அம்பிகையின் பங்கு' என்னும் விடயம் பற்றி நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தொடர் உபந்நியாசம் செய்வார்கள்.

**பொய்யாமொழி**



குறள்:

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

பொருள்:

உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

## மருத்துவ வசதி பொதுமக்களை நெருங்க வேண்டும்

### சிகிச்சைப்பிரிவு திறப்புவிழாவில் வண.பிதா

யாழ்ப்பாணம். பெப். 13

இன்று யாழ்ப்பாணத்தில் நிலவும் பயங்கரச் சூழ்நிலையில் மருத்துவ வசதிகளை ஒவ்வொருவரின் வீட்டு வாயிலுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.

மானிப்பாய் கிறீன் மெமோரியல் ஆஸ்பத்திரியில் குறைந்த செலவுடன் கூடிய சிகிச்சை வார்ட், திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்னிந்திய திருச்சபை ஆயர் வண.பிதா டி. ஜே. அம்பலவாணர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வைத்தியசாலை நிர்வாக சபைத் தலைவர் திரு. ஏ. ஆர் கதிர்காமர் தலைமைவகித்தார்.

வடபிரதேசத்தில் உருவான முதல் மருத்துவமனை கிறீன் மெமோரியல் ஆஸ்பத்திரியாகும். டாக்டர் கிறீன் எடுத்த பெரு முயற்சி காரணமாக இந்த மருத்துவமனை மேலும் வளர்ந்தது.

அன்னாரின் அளப்பரிய சேவையினால் ஆரம்பமானது யாழ்ப்பாண அரசினர் மருத்துவமனை. அது இன்று யாழ் மாவட்ட ஆதார ஆஸ்பத்திரியாகவும், போதனை வைத்தியசாலையாகவும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது.

ஏழைகளுக்கு மருத்துவ வசதிகள் சுலபமாகக் கிட்ட வேண்டும் என்ற கிறிஸ்தவ இயக்க சேவை உணர்வின் அடிப்படையில்– மாறும் மக்கள் தேவையின் அடிப்படையில்– இப்புதிய சேவை ஆரம்பமாகிறது என்று வண.பிதா அம்பலவாணர் தனது சிறப்புரையில் கூறினார்

திரு. இராஜன் கதிர்காமர் தனது தலைமையுரையில் இவ்வைத்தியசாலையின் வரலாற்றையும் எடுத்துரைத்தார்.

நன்றியுரை கூறிய டாக்டர் திருமதி டி சி. அம்பலவாணர் இப்புதிய சேவை வார்ட்டை நிறுவ வைத்தியர்கள். தாதிமார்கள் சிரமதான அடிப்படையில் செய்த சேவையினைப் பாராட்டினார் ஓய்வுபெற்றநிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். வயிரமுத்துவும் கருத்துரை வழங்கினார்.

## கோயில் பற்றிய ஆய்வில் மாணவர்கள் முயற்சி

யாழ்ப்பாணம், பெப் 13

கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் தமது சூழலில் உள்ள கோயில்கள் பற்றிய ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளனர்.

கோயில் அமைப்பு, கோயில் சார்ந்த இலக்கியம் என்பன இவர்களின் முன்னோடிச் செயற் திட்டமாக அமையும்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. விநாயகமூர்த்தியின் நெறிப்படுத்தலின் கீழ் கல்லூரி ஆசிரியர்கள் திரு கு சண்முகநாதன், திரு. கே. கணேசபிள்ளை ஆகியோர் இம்முயற்சிக்குப் பொறுப்பாக இருப்பர்.

நல்லூர் கல்விவள நிலையத்தின் சார்பில் நடைபெறும் இம்முன்னோடிச் செயற்திட்டத்தில் மாணவர்கள் களிமண், சவர்க்காரம் மூலம் சிற்பங்கள் செய்யவும் பயில்வர். இதற்கு சிற்பக் கலைஞர்கள், ஓவியர்களின் செய்முறைப்போதனையும் ஒழுங்கு செய்யப்படும்.

நல்லூர் கல்விவள நிலைய பொறுப்பு அலுவலர் மயிலங்கூடலூர். பி. நடராசன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

## மாவிட்டபுரம் குமாரகோயில் பொதுச் சொத்தாகியது

யாழ்ப்பாணம். பெப். 13

மாவிட்டபுரம் பழை குமாரகோயில் பொது மக்கள் சொத்தாக மாறியது.

ஐந்து பேர் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் கோயில் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரமும் அவரின் மனைவி விவேகானந்த சிவம் ஆகியோருக்கு இக்கோயிலும் அதன் 5 பரப்புக் காணியும் சொந்தமாக இருந்து வந்தது.

உபயகாரர், திருப்பணியாளர்கள், தொண்டர்களின் எழுத்து மூலமான வேண்டுகோளைத் தொடர்ந்து பண்டிதர் பஞ்சாட்சரம் தம்பதிகள் உறுதிமூலம் பரிபாலன சபையிடம் ஒப்படைத்தனர்.

பரிபாலன சபை நிர்வாகிகள் விவரம் வருமாறு;

தலைவர்: திரு. வே முருகுப்பிள்ளை.

செயலாளர்: திரு. அ. விநாயகமூர்த்தி.

பொருளாளர்: திரு. வை. நடராசா.

உறுப்பினர்கள்: திரு. நா. நடராசா திரு. ச. வே. பஞ்சாட்சரம்.

பண்டிதர் பஞ்சாட்சரம், பிரபல கவிஞர், நூலாசிரியர் இந்து சாதனம் பத்திரிகையின் உதவி ஆசிரியர். யாழ் இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

## விமானப்படை சுற்றுடல்

## காணி சுவீகரிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள்

### நிவாரணம் வழங்க கோரிக்கை

மட்டக்களப்பு, பெப்.13

மட்டக்களப்பு விமானப்படை சுற்றுடல் காணி சுவீகரிப்பினால் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறியவர்களுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

மேற்படி கோரிக்கையை பாதிக்கப்பட்டோர் சங்கம் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

குடியிருப்பாளர்களுக்குரிய காணி வீடு,உடைமைகளுக்குரிய நஷ்ட ஈடு உடன் வழங்கப்படல் வேண்டும்.

வெளியேறிய குடியிருப்பாளர்கள் வீடு கட்ட வீடமைப்பு அதிகார சபை மூலம் கடனுதவி வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை வழங்கப்படவில்லை.

மூன்று மாத காலம் இலவச உணவு வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஒரு மாதத்துடன் நிறுத்தப்பட்டது மிகுதி இரு மாதங்களும் வழங்க ஆவன செய்யவும்.

இடம் பெயர்ந்தோர் குடியமர்த்தப் பட்டுள்ள இடங்களுக்கு கிணறு, மின்சாரம், வீதி வசதி ஏற்படுத்தித் தரப்படவேண்டும்.

இடம் பெயர்ந்தவர்களில் சிலருக்கு முற்பணம் 2 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை.

### வேலணையில் அகதி முகாம்

வேலணை, பெப். 13

வேலணை சேர் துரைச்சாமி மகா வித்தியாலய ஆண்கள் விடுதியில் அகதிகள் முகாம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து அகதிகளாக வந்த ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் இங்கு தஞ்சமடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்புக்களை தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி. மைதிலி சோமசுந்தரம் வழங்கி வருகின்றார்.

## சமய சந்நிதிகளில்

### அமைதி வேண்டி இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப். 13

செல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 24ஆம் திகதி வரை பத்து நாட்கள் மாசிமக இலட்சார்ச்சனை நடைபெற உள்ளது.

தற்போதைய பதற்ற நிலை மாறி அமைதி நிலவ வேண்டுமென இறைவனை வேண்டி இவ்வழிபாடு நடைபெறவுள்ளது.

### கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, பெப்.13

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீவள்ளி தெய்வசேனா சுப்பிரமணியப் பெருமானுக்கு கடந்த ஞாயிறு காலை மகாகும்பாபிஷேகமும் மாலை திருக்கல்யாண வைபவமும் சிறப்புற நடைபெற்றன.

வேத, திருமுறை பாராயணங்களுடன் இடம்பெற்ற இந்நிகழ்ச்சிகளை பிரதிஷ்டா வித்தகர் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் நடத்தி வைத்தார்.

## பம்பாய் வெங்காய செய்கையில் அராலியூர் பெரும் சாதனை

வட்டுக்கோட்டை, பெப். 13

பம்பாய் வெங்காயச் செய்கையில் அராலியூர் கிராமம் யாழ் மாவட்டத்தில் பெரும் சாதனை நிலைநாட்டியிருக்கிறது.

அதிக அளவிலும், மிகத்தரமான முறையிலும் இக்கிராமத்தில் பம்பாய் வெங்காயம் செய்கை பண்ணப்படுகிறது.

இதன் காரணமாக இக்கிராமம் பம்பாய் வெங்காய உற்பத்திக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்...

... காய உற்பத்தியாளர் சங்கம் நடத்திய கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அராலி மேற்கு தாச்சி மைதானத்தில் சங்கத் தலைவர் திரு. நா. குகராசா தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

தலைவர் திரு. நா. குகராசா தலைமையுரை நிகழ்த்தும் போது கடந்த வருடம் விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு இரண்டு மாதங்களுக்கு இறக்குமதியை நீக்கித் தந்த விவசாயப்பகுதியினருக்கும் அரசாங்க அதிபருக்கும் நன்றி தெரிவித்தார்.

... விவசாய அலுவலர் திரு. ... டப்பகுதி விவசாய அலுவலர் திரு ஜெ. பரமானந்தம், விவசாய ஆய்வாளர் திரு. கே தேவசபை, விவசாய ஆராய்ச்சியாளர் செல்வி எம். தனபாலச்சந்திரன், தொல்புரம் கமநல சேவைப் பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. ரி. ஜி. ரி. சோமநாதர் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

பெருந் தொகையான விவசாயிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

சங்கச் செயலாளர் திரு. என். சந்திரசேகரம்பிள்ளை (அராலிவிசேட சேவை உத்தியோகத்தர்) நன்றியுரை நிகழ்த்தினார்

## பாடசாலை தரம் உயர்வு

வட்டுக்கோட்டை,பெப்.13

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்தில் அராலி கிழக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஒன்று மாத்திரம் இவ்வாண்டுதரம் உயர்த்தப்பட்டுள்ளது

இப்பாடசாலையில் ஏழாம் ஆண்டு ஆரம்பித்து இப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி புரியுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பொது ஸ்தாபனங்களும் யாழ் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது


உதயனின் வார இதழ் சஞ்சீவி

* * *

சனிதோறும் வெளிவருகிறது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**BECON**
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
விலங்கியல்: திரு. தம்பிராசா, B.Sc.
(சனி - ஞாயிறு)
86 A/L — 12.30
பிறப்புரிமையியல்
87 A/L — 1.30 88 A/L — 2.30

# உதயன்

13. 02. 1986

**BECON**
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
விலங்கியல்: திரு தம்பிராசா, B.Sc.
(சனி - ஞாயிறு)
86 A/L — 12.30
பிறப்புரிமையியல்
87 A/L — 1.30 88 A/L — 2.30

# வட பகுதி இருளில் மூழ்கும் ஆபத்து

## மின்மாற்றி கொள்ளைகளால் உருவாகியுள்ள அபாயநிலை

யாழ்ப்பாணம், பெப். 13

வடபகுதி இருளில் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

மின்சார சபை உயரதிகாரி ஒருவர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

தற்போது டிரான்ஸ்போமர்களும் (மின்மாற்றி) கொள்ளை இடப்படுவதை அடுத்தே இந்த நிலை ஏற்படலாம் என அவர் தெரிவித்தார்.

சட்டவிரோத மின் பாவனையால் வடக்கில் கடந்த ஒருவருடகாலத்தினுள் ஐந்து டிரான்ஸ்போமர்கள், பளு அதிகரித்து எரிந்து நாசமாகி விட்டன.

இந்த நிலையில் திருத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட டிரான்ஸ்போமர்களும் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

கடந்த செவ்வாய் இரவு யாழ் அரசடி வீதியில் உள்ள இலங்கை மின்சார நிலைய டிப்போவில் இருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான டிரான்ஸ்போமர் ஒன்று கொள்ளையிடப்பட்டிருக்கிறது

மின்சார சபைக்குச் சொந்தமான பல வாகனங்கள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன. மற்றொரு வாகனம் டிப்போவுக்கு பக்கத்தில் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் வடபகுதி பிரிவின் கைவசம் வாகனம் ஏதும் இல்லை.

தற்போது நடக்கும் கொள்ளைகள் தொடர்ந்தால் வடக்கிற்கு டிரான்ஸ்போமர்கள் அனுப்புவதை அரசு நிறுத்தி விடக்கூடும்.

அந்நிலை ஏற்பட்டால் வடக்கு இருளில் மூழ்குவது உறுதி.

இப்படி அந்த அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

## தீயில் வெந்து குழந்தை சாவு

### புத்தூரில் சம்பவம்

நல்லூர், பெப். 13

குடிசை ஒன்று தீப்பற்றி எரிந்ததால் ஒரு வயதுப் பெண் குழந்தை தீயில் வெந்து மரணமாகியது.

இந்தப் பரிதாபச் சம்பவம் கடந்த செவ்வாயன்று புத்தூரில் நடந்தது.

சின்னையா சிவானந்திவி என்ற குழந்தையே மரணமானது.

தேநீர் தயாரிப்பதற்காக மூட்டப்பட்ட அடுப்பு நித்திரையாக இருந்த குழந்தைக்கு எமனாகியது.

அடுப்பில் இருந்த தீப்பொறி குடிசையில் பட்டதால் அது தீப்பற்றி எரிந்தது என்று கூறப்படுகிறது.

எரிகாயங்களுடன் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட குழந்தை பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு குழந்தை மரணமாகியது

மரண விசாரணை நடத்திய யாழ் பதில் நீதிவான் திரு. கே. கேசவன் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## திருமதி புலேந்திரன் வீட்டில் கொள்ளை

யாழ்ப்பாணம், பெப், 13

வவுனியா ஐ.தே.கட்சி அமைப்பாளரான திருமதி புலேந்திரனின் வீட்டிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

தொலைக்காட்சிப் பெட்டி, டெக், மேசை, மின்விசிறி உட்பட பல பொருள்கள் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வடபகுதியில் பாட நூல் விநியோகம் உரிய முறையில் நடைபெறவில்லை எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.13

வடபகுதி மாணவர்களுக்கு இலவச பாட நூல் விநியோகம் சரியான முறையில் இடம் பெறவில்லை

இதனால் கல்வி வளர்ச்சியில் தேக்க நிலை உருவாகியுள்ளது.

இப்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் பிரதேச பிரசாரச் செயலாளர் திரு. ந. சிவபாதம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

பல சிரமங்களுக்கு மத்தியில் வட பகுதிக்கு பாடநூல்கள் தருவிக்கப்பட்டன.

இவற்றில் இருந்து ஒவ்வொரு பாடசாலைக்கும் 25 விகிதத்தில் இருந்து 45 விகித நூல்களே வழங்கப்பட இருக்கின்றன.

கடந்த ஆண்டு ஆரம்ப பாடசாலைகளுக்கு 5ஆம் வகுப்புத்தமிழ் விநியோகிக்கப்படவில்லை. பாலர் வாசகமும் விநியோகிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு வந்துள்ள நூல்களில் 1, 2, 3, 4, 5ஆம் வகுப்புக்களுக்குத் தேவையான முக்கிய பாடநூல்கள் இல்லை.

இதனால் மாணவர் ஆரம்பக் கல்வியைப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இலவச பாட நூல் விநியோகத்தில் கடந்த சில ஆண்டுகளாக வடபகுதி மாணவர் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஓய்வூதிய திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 13

கொக்குவில் தபால் நிலையப்பிரிவு ஊடாக ஓய்வூதியம் பெற்று வந்தவர்கள் இம்மாதத்திற்கான ஓய்வூதியத்தை பெப்ரவரி 26இல் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி17இல் வழங்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது செல்லுபடியாகாது என்று தபால் நிலைய அதிகாரி ஒருவர் சொன்னார்.

## நேற்றும் பருத்தித்துறையில் குண்டுச்சத்தம்

பருத்தித்துறை, பெப். 13

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதனைத் தொடர்ந்து நகரச் சுற்றுடலில் பதற்றம் ஏற்பட்டது. பாடசாலை மாணவர்கள் பாடசாலையிலிருந்து அச்சத்தின் காரணமாக வெளியேறினார்கள். கடைகள் இழுத்து மூடப்பட்டன

## ஈரோஸின் விளக்க அறிக்கை

யாழ்ப்பாணம், பெப்.13

கடந்த வியாழக்கிழமை ரெலோ இயக்கத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்று தொடர்பாக ஈரோஸ் இயக்கத்தினர் விளக்கமளித்து அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்கள்.

ரெலோ இயக்கத்தின் தலைவர் திரு சிறீ. சபாரத்தினத்திற்கு விளிக்கப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடாநாட்டுப் பத்திரிகைகளில் 07 - 02 - 86 அன்று ஈரோஸ்மீது வீண் பழி சுமத்தும் நோக்கில் வெளியிடப்பட்ட அவசர அறிக்கையை கண்டதும் நாம் அதிர்ச்சி அடைந்தோம். நாம் செய்யாத செயல்களைச் செய்ததாக குற்றம் சாட்டி உங்களைச் சிலர் தவறாக வழி நடத்த முற்பட்டிருப்பதை உணர முடிகிறது.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன் ஒந்தாச்சிமடத்தில் எமது இயக்கப் பெயரைச் சொல்லி உங்கள் உறுப்பினர் ஆறு பேர் சூரியா அரிசி ஆலையில் கொள்ளையிட்டுள்ளனர். இக் கொள்ளைக்கு தலைமை வகித்து வந்த ரெலோ உறுப்பினரின் பெயரும் விவரமும் எம்மிடமுண்டு.

இச்சம்பவத்தை அடுத்து எமது இயக்க முக்கிய உறுப்பினர் ஒருவரின் வீட்டில் சுமார் ஒருமாதத்திற்கு முன்இன்னொரு கொள்ளையையும் செய்துள்ளனர். இக் கொள்ளையில் சுமார் ஒரு லட்சம்பெறுமதி வாய்ந்த நகைகளும் பணமும் ரெலோ உறுப்பினரால் எடுத்துச் செல்லப்பட்டதுடன் அவ்வீட்டிலிருந்த எமது தோழரின் தாய் மீது தகாத வார்த்தைப் பிரயோகமும் செய்யப்பட்டுள்ளது.

இவற்றை நாம்ரெலோவினரின் கவனத்திற்கு கொண்டு வந்தபின் கடந்த முதலாம் திகதியன்று பாலையடி வெட்டை என்னுமிடத்தில் எமது இஸ்லாமிய ஆதரவாளர்ஒருவரையும் அவரது நண்பர்கள் இருவரையும் கடத்த முற்பட்டபோது எமது தோழர்கள் தடுத்து நிறுத்த முற்பட்ட சம்பவமே மட்டக்களப்பில் நடைபெற்றதாகும்.

இக்கடத்தலைத் தடுத்து நிறுத்தமுற்பட்ட எமது தோழர்களில் ஒருவரை துரத்திச் சுட்டனர்.

ஆள் கடத்தல் தடுக்கப்பட்டதை அடுத்து மறுநாள்எமதுமூன்றுதோழர்களை திடீரென ரெலோவினர் கடத்திச் சென்றனர். இவர்களை மீட்க அவ்விடமுள்ள ரெலோவின் முக்கிய உறுப்பினரிடம் அணுகியபோது அவர்கள் சம்மதிக்கவில்லை.

இதனால் ஆயுதங்கள் சகிதம் உங்கள் முகாமை முற்றுகையிட்டு எமது தோழர்களை மீட்கவேண்டியதாயிற்று. இச்சம்பவத்தில் எமது பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவதற்காக ரெலோ உறுப்பினர் 7 பேர் எமதுபாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டனர். இவர்கள் 09-02-86 அன்று சம்பவம் நடந்த இடத்தில் ஊர்மக்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

இதுவே மட்டக்களப்பில் நடந்த சம்பவ விவரமாகும். இவற்றைத் திரித்து நாம் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாயும் அதை ரெலோ விசாரணை செய்ய வந்த தாயும், சைக்கிள்செயினாலும் கத்தியாலும் தாக்கியதாயும் எம்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாம் ஐக்கியத்தைக் குலைக்கும் சக்தியல்ல என்பதும், ஏனைய இயக்கங்கள்மீது ஆளுமை செலுத்தும் எண்ணம் கொண்டவர்கள் அல்ல என்பதுவும் அனைவருக்கும் வெளிச்சமானது.

இஸ்லாமிய மக்களை தமிழ் பேசும் மக்களிலிருந்து பிரித்தாளும் நோக்கமுடைய ஆட்சியாளரின் சதிக்கு ரெலோ உறுப்பினர் சிலர் உடந்தையாக இருப்பது கவலைக்கிடமானது.

## மட்டக்களப்பில் இளம் பெண் மானபங்கம்

மட்டக்களப்பு, பெப். 13

ஆயுதப்படையினர் தேடுதல் நடத்தியபோது மானபங்கப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இளம் தமிழ்ப் பெண் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் நேற்று சேர்க்கப்பட்டார்.

கிருமிச்சைக் குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த 2 குழந்தைகளின் தாயாரான மூக்கம்மா என்ற பெண்ணுக்கே இக்கதி ஏற்பட்டது

மாங்கேணிக்குச் சென்றுவிட்டு நண்பகல் நேரம் வீடு திரும்பினார் இப்பெண்.

வீட்டைச் சுற்றி சீருடை அணிந்தவர்கள் நிற்க இவர் கண்டார்.

பின்னர் இருவர் இவரை மானபங்கப்படுத்தினார்களாம்.

## பசளை பாவனை பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 13

பசளை பாவனை தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை யாழ் கமநல சேவைத் திணைக்களம் விரைவில் நடத்தும்.

தேசிய பசளைச் செயலகத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறும் கருத்தரங்கில் கமத்தொழில் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் அறுபது பேர் கலந்துகொள்வர்.

## மாநில ...

(1-ம் பக்க தொடர்ச்சி)

அழைப்பின் பேரில் சென்ற கிழக்கிலங்கைக் கூட்டணிப் பிரமுகர்கள் நால்வரில் இவரும் ஒருவர்.

மற்றவர்கள் வருமாறு;

1. திரு.சம்பந்தமூர்த்தி.
2. திரு.கே.வேல்முருகு.
3. திரு. அல்பர்ட் சீவரத்தினம்.

திரு. அம்பலவாணர் மட்டுமே தற்சமயம் நாடு திரும்பியுள்ளார். ஏனைய மூவரும் வார இறுதியில் நாடு திரும்புவர் என்று தெரிகிறது.

## கிளிநொச்சி முகாம் நாளாந்தம் விஸ்தரிப்பு

கிளிநொச்சி பெப். 13

கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்தின் முன் இருந்த வனபரிபாலன திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடம் கடந்த செவ்வாயன்று இராணுவத்தினரின் நேரடி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இதனால் அருகிலுள்ள கனிஷ்ட வித்தியாலயத்திற்கு பாடசாலைப் பிள்ளைகள் செல்ல அச்சம் கொண்டுள்ளனர்.

இதேவேளை இதன் அருகில் உள்ள நீர்ப்பாசன இலாகா விடுதிகளும் இராணுவத்தால் சுவீகரிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முகாமிற்கு அருகே இருக்கும் மாவட்ட வைத்தியசாலைக்கு ஆஸ்பத்திரி ஊழியர்கள், பொதுமக்கள் செல்வதற்கு அச்சம் கொண்டுள்ளனர்.

## ஒய்வு பெற்றார்

கிளிநொச்சி, பெப்.13

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். பாலரத்தினம் ஓய்வு பெற்றார்.

## கடற்படைக்குச் சென்ற அரிசி லொறியுடன் அபேஸ்!

### சிற்றூழியரும் கடத்தப்பட்டார்

பண்டத்தரிப்பு, பெப்,13

காரைநகர் கடற்படைக்கு லொறியில் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் 77 மூடை சம்பா அரிசி கடந்த செவ்வாயன்று இடைவழியில் லொறியுடன் கடத்தப்பட்டது.

லொறியில் சென்ற கடற்படைச் சிற்றூழியர் ஒருவரும் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது;

கடற்படைச் சிற்றூழியரான சி. பொன்னுத்துரை என்பவர் 77மூடை சம்பா அரிசியை சுன்னாகத்தில் கொள்வனவு செய்தபின் லொறி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில்அவற்றை காரைநகருக்கு கொண்டு சென்றாராம்.

பகல் 11-30 மணியளவில் பொன்னாலை பாலத்திற்கு முன் ஆயுதபாணிகளாகத் தோன்றிய இனந்தெரியாத கோஷ்டி ஒன்று லொறியை வழி மறித்தது.

லொறியில் இருந்த சாரதி, கிளீனர், கடற்படைச் சிற்றூழியர் ஆகிய மூவரையும் கண்ணைக் கட்டி கடத்தியது.

மூவரும் தனித்தனியாக விசாரிக்கப்பட்டனர். கிளீனரும் சாரதியும் பின்னர் வழியில் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு வழிச்செலவுக்கு பணமும் கொடுக்கப்பட்டது.

ஆனால் கடற்படை சிற்றூழியர் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இவர் பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர். ஏழு பிள்ளைகளின் தந்தை. கடந்த 26 வருடகாலமாக காரைநகர் கடற்படை முகாமில் சிற்றூழியராக வேலை செய்து வருபவர்.

இந்த ஆண்டு ஓய்வு பெறவிருக்கும் இவருக்கு வயதுக்கு வந்த திருமணமாகாத பெண் பிள்ளைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில்

## இளம் பெண்ணுக்கு மின்கம்ப தண்டனை

### 2 பிள்ளைகளின் தாய்க்கு இந்தக் கதி

மட்டக்களப்பு, பெப்.13

மட்டக்களப்பில் 28 வயது தமிழ்ப் பெண்ணுக்கு மின்கம்ப மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இப்பெண்ணின் பெயர் சந்திரராணி. 2 குழந்தைகளின் தாய்.

தாண்டவன் வெளி வாசியான இவர் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு அண்மையில்தான் நாடு திரும்பி இருந்தார். கணவரைப் பிரிந்து வாழ்ந்து வந்தார்.

## பாலைதீவுக் கடலில் படகுகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த வல்லிபுரம் யோகராசா (வயது 27) என்ற இளைஞர் மட்டும் கடலில் பாய்ந்து தப்பினார்.

இதேவேளை அதே கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மன்னார் பகுதியைச் சேர்ந்த இயந்திரப் படகு ஒன்றும் பீரங்கித் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரியவருகிறது.

இந்தப் படகு மன்னாரைச் சேர்ந்த அன்ரன் மனுவல் என்பவருக்குச் சொந்தமானது எனக் கூறப்படுகிறது.

பீரங்கித் தாக்குதலினால் இந்தப் படகு தீப்பற்றி எரிந்து மூழ்கிவிட்டதாகவும்-

அதில் சென்ற 6 மீனவர்களும் நீரில் மூழ்கியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

மன்னார் பகுதியிலிருந்து மூன்று இயந்திரப் படகுகள் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இடத்தை நோக்கித் தேடுதலுக்காக விரைந்திருக்கின்றன.

### தப்பியவர்

தாக்குதலுக்குள்ளான குருநகர் படகில் இருந்து தப்பிய யோகராசா இன்னும் கரைவந்து சேரவில்லை.

அவர் சென்ற படகு தீப்பற்றி நீரில் மூழ்கியதை அடுத்து அவர் நீண்ட தூரம் இருளில் கரையை நோக்கி நீந்தியதாகத் தெரிகிறது.

கரைக்கு வரும் நடுவழியில் தோணி ஒன்றில் சென்றவர்களை அவர் சந்தித்தார். தோணியில் ஏறினார்.

தோணியில் கரையை நோக்கி வந்தபோது குருநகரைச் சேர்ந்த இரண்டு இயந்திரப் படகுகளை அவர் கண்டார்.

அந்தப் படகு ஒன்றில் ஏறிய யோகராசா, காணாமல் போன மற்றையவர்களைத் தேடி சம்பவம் நடந்த இடத்துக்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நள்ளிரவுவரை மீட்பு வேலைகளுக்குச் சென்ற இரு இயந்திர வள்ளங்களும் அதில் சென்ற மீனவர்களும் குருநகர் இறங்குதுறை வந்து சேரவில்லை.

### குருநகரில் சோகமயம்

காணாமல் போன ஆறு குருநகர்வாசிகளினதும் உறவினர்களும் மற்றைய நண்பர்களும் குருநகர் துறைப்பகுதி ஓரத்தில் கடற்கரையை நோக்கி எதிர்பார்த்த வண்ணம் சோகமாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

குருநகர் பகுதி படகில் சென்று காணாமல்போன ஆறு பேரினதும் விவரம் வருமாறு:-

1. ஞானப்பிரகாசம் அனிக்கிலற் (வயது 27). குருநகர் டேவிற் வீதியைச் சேர்ந்தவர். இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை.

2. அல்போன்ஸ் எட்மன் (22 வயது) சென். பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்தவர்.

3. ஜோசப் துரைமணி (35 வயது) பூங்கா வீதி வாசி இவருக்கு 6 பிள்ளைகள் உள்ளனர்.

4. அந்தோனிப் பிள்ளை ராஜன் (25 வயது) சென் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்தவர் 2 பிள்ளைகளின் தந்தை.

5. செபஸ்தியன் கெழை சென்பற்றிக்ஸ் வீதி. (18 வயது)

6. இராசமணி அன்ரன் சென் பற்றிக்ஸ் வீதி (20 வயது)

இச்சம்பவத்தையடுத்து நேற்றுக்காலை 6மணியளவில் சிறிய விமானம் ஒன்றும் பாலைதீவு, கக்கடத்தீவுப் பகுதிகளில் தாழப் பறந்து ரோந்துச் சேவையில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது.

சேதமடைந்த மீன்பிடி வலைகள், படகு மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பெறுமதி ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சுயாட்சியை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியா இலங்கைக்கு கோடிட்டுக் காட்டியது.

ஆனால் இலங்கை அரசாங்கமோ, புதிதாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றும்,—

அப்பேச்சுக்களின்போது ஒரு தொகுதி யோசனைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், விரும்புகிறது.

அந்த யோசனைகளின் அடிப்படையில் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் இலங்கையின் நிலை.

இலங்கையின் இத்தூண்டிலுக்கு இரையாக இந்தியா தயாராக இல்லை.

ஆரம்பத்திலேயே உத்தேச தீர்வு குறித்து ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் கட்டுப்படாமல் இருப்பதைத் தவிர்க்கும் தந்திரமே இத்தூண்டில் ஆகும்.

கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து சாதகமான பதிலுடன், இலங்கை வரவேண்டும் என்பது விளங்கிக்கொள்ளக் கூடியது.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்தியா ஏதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், அதற்கு முன்பாக முழு அளவிலான சுயாட்சி வழங்கக்கூடிய பதிலுடன் இலங்கை அரசு முன்வர வேண்டும்.

இப்படி திரு. ரெட்டி தமது செய்திக் கட்டுரையில் எழுதியிருக்கின்றார்

### யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் பிரதான வீதியில் அமைந்துள்ள ரவுண்சொப் கிளையில் தளபாட உபகரணங்கள்

**ஏல விற்பனை**

இடம்: பிரதான வீதி
காலம்: 16 — 2 — 86
நேரம்: காலை 10.00 மணி முதல் 3-00 மணி வரை

பொருட்கள்: பிடவைக் கடை காட்சிப்படுத்தும் தேக்கு மரத்தினால் ஆன கண்ணாடி அலுமாரிகள்.

கந்தோர் பாவிப்புக்கான முதிரை மேசைகள், கதிரைகள், முக்காலிகள், கடைகளுக்குத் தேவையான விறாக்கிகள், பட்டடைகள் ஆகியன நல்ல நிலையில் விற்பனை செய்யப்படும்.

பொது முகாமையாளர்.
127, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
12.2.86.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 13 . 2 . 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org